2014 ஜூலை 17]
166—

## தரம் உயர்த்துதல்

***32385—திரு. ஆ.க. அரங்கநாதன்:**

*மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம், அவலூர்பேட்டையிலுள்ள 33/11 K.V. துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம், அவலூர்பேட்டை 33/11 கிலோவோல்ட் துணை மின் நிலையத்தில் 5 M.V.A. திறன்கொண்ட இரண்டு மின்மாற்றிகள் உள்ளன. துணை மின் நிலையத்தின் உச்ச பளு 7.4 M.V.A. ஆகும். பெருகிவரும் மின் பளுவைக் கருத்தில்கொண்டு மேற்கண்ட மின்மாற்றிகளை 8 M.V.A. திறன் கொண்ட இரண்டு மின்மாற்றிகளாக நிறுவுவதற்காக 12–வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், 2015–2016 ஆம் ஆண்டுத் திட்டத்திலே திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, அவலூர்பேட்டையிலுள்ள 33/11 K.V. துணை மின் நிலையத்தை 110/11 K.V. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்துவதற்கான அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.க. அரங்கநாதன் அவர்கள்.*

**திரு. ஆ.க. அரங்கநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தை வென்றவர், காவியம் ஆனவர், தமிழக மக்களின் வேதனை தீர்த்தவர், வெற்றித் திருமகள், (மேசையைத்*

தட்டும் ஒலி) கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் இருண்டு கிடந்த தமிழகத்தின் இருள் நீக்கி, ஒளி ஏற்றிய தாயே, எங்களின் காவல் தெய்வமே, தங்களின் புனித மலர்ப் பாதம் பணிந்து வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம், அவலூர்பேட்டையிலுள்ள 33/11 K.V. துணை மின் நிலையத்தை 110/11 K.V. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியே அதுதான், அதற்கு நான் பதில் சொல்லிவிட்டேன். விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம், அவலூர்பேட்டையிலுள்ள 33/11 K.V. துணை மின் நிலையத்திலிருந்து கோவில்துறையூர், மச்சானூர், கப்பலாம்பாடி, கோட்டைப்பூண்டி, குண்டலாம்பட்டு மற்றும் வடிவுப்பூண்டி ஆகிய கிராமங்களுக்கு மின் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. அவலூர்பேட்டையிலுள்ள 33/11 K.V. துணை மின் நிலையத்தில் 5 M.V.A. திறன் கொண்ட இரண்டு மின்மாற்றிகள் இருக்கின்றன. அவற்றிலிருந்து 10 M.V.A. மின்பளு வரை மின் விநியோகம் செய்ய முடியும். ஆனால், இப்போது அந்தப் பகுதியில் இருக்கின்ற உச்ச மின்பளுவே 7.4 M.V.A. என்ற அளவிலேதான் இருக்கின்றது. இருந்தாலும்கூட பெருகிவரும் மின் தேவையைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அந்த 5 M.V.A. திறன் கொண்ட மின்மாற்றிகளை மாற்றிவிட்டு, இரண்டையும் 8 M.V.A. திறன் கொண்ட மின்மாற்றிகளாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்மூலமாக ஒட்டுமொத்தமாக 16 M.V.A. திறன் கொண்ட துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்துவதற்கு, இப்போது முடிவு செய்யப்பட்டு, 12-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே, 2015-2016 ஆம் ஆண்டு செயல்படுத்துவதற்குரிய செயற்குறிப்புகள் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் முடிவு செய்யப்பட்டுள்ளது.

2014 ஜூலை 17]

ஆகவே, அந்தப் பகுதியின் வருங்கால மின் தேவையைக் கருத்தில் கொண்டு, 16 M.V.A. திறன் கொண்ட மின்மாற்றிகளாக மாற்றப்படும் நிலையில், அந்த 33/11 K.V. துணை மின் நிலையத்தை 110/11 K.V. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். உங்களுக்குத் தேவையான மின்சாரம் வர வேண்டும். அது 33/11 K.V. துணை மின் நிலையத்திலிருந்து வந்தால் என்ன, 110/11 K.V. துணை மின் நிலையத்திலிருந்து வந்தால் என்ன அல்லது 230/11 K.V. துணை மின் நிலையத்திலிருந்து வந்தால் என்ன? அதைப் பற்றி எந்தப் பிரச்சினையும் இல்லை. மின் மாற்றிகளைத் தரம் உயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கைக்கிணங்க எந்த அளவிற்கு அந்தப் பகுதியில் விரைந்து செயல்படுத்த முடியுமோ அந்த அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்கான பணியை விரைந்து செய்வதற்கு நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.க. அரங்கநாதன் அவர்கள்.

**திரு. ஆ.க. அரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இயங்கிவருவது 33/11 K.V. துணை மின் நிலையம் ஆகும். பெருகிவரும் மின் தேவையைக் கருத்திற் கொண்டும், இந்த ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்த வாய்ப்புள்ளதாலும், வளர்ந்து வருகின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே 110/11 K.V. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்திட ஆவன செய்ய வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும். என்னுடைய கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், பேரந்தவாடி ஊராட்சியிலே 33/11 K.V. துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அதற்குத் தேவையான 5 ஏக்கர் நிலம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு அருகிலே உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 8 ஆயிரம் மக்கள்தொகையைக் கொண்டு, ஒன்றியத்தின் மிகப் பெரிய ஊராட்சியாக விளங்கும் அந்தப் பகுதியில் 33/11 K.V. துணை

மின் நிலையம் அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமாய் பணிவோடு கேட்டு, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 10—15*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியிலே 33/11 K.V. துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியினுடைய மின் பளுவை ஆய்வு செய்து, தேவை ஏற்படின் புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*ஏற்கெனவே விழுப்புரம் மாவட்டத்திலே எந்தெந்தப் பகுதிகளிலே மின் பளுவிற்கேற்ப மின் நிலையங்களுடைய தரம் போதுமான அளவிற்கு இல்லை என்பதைக் கண்டறிந்து, முன்னுரிமை மற்றும் தேவையின் அடிப்படையிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விழுப்புரம் மாவட்டத்திலே 9 புதிய துணை மின் நிலையங்களை அமைப்பதற்கு முடிவு செய்திருக்கிறது. அந்தவகையிலே விழுப்புரம் மாவட்டத்திலே அழகாபுரம் 230/110 K.V. துணை மின் நிலையம், திண்டிவனம் 230/110 K.V. துணை மின் நிலையம், பஞ்சமாதேவி 110/22 K.V. துணை மின் நிலையம், வீராபுரம் 110/22 K.V. துணை மின் நிலையம், மணலூர்பேட்டை 110/22 K.V. துணை மின் நிலையம், தச்சூர் 110/22 K.V. துணை மின் நிலையம், திருநாவலூர் 110/22 K.V. துணை மின் நிலையம், நல்லான்பிள்ளைபெற்றான் 33/11 K.V. துணை மின் நிலையம்—ஏற்கெனவே அது இப்பொழுது இந்தத் திட்டத்திலே சேர்க்கப்பட்டு, நிறுவப்பட்டு, தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது. அவரப்பாக்கம் 33/11 K.V. துணை மின் நிலையம், ஆக இந்த 9 துணை மின் நிலையங்களில் நல்லான்பிள்ளைபெற்றான் மட்டும் இப்பொழுது வேலை முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. ஏற்கெனவே ஒரு துணை மின் நிலையம் 2012—2013 ஆம் நிதியாண்டில் முடிக்கப்பட்டதைப்போல, 2014—2015, 2015—2016 இந்த இரண்டு ஆண்டுகளுக்குள் மீதியிருக்கின்ற 8 துணை மின் நிலையங்களும் விழுப்புரம் மாவட்டத்தில் நிறுவப்படும் என்பதைத்*

2014 ஜூலை 17]

தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட அந்தப் பகுதியில் ஏற்கெனவே திட்டமிடப்பட்ட துணை மின் நிலையங்கள் இந்தப் பகுதிக்குள் வருகிறதா என்று தெரியவில்லை. இருந்தாலும்கூட அந்தப் பகுதியிலும் ஆய்வுகளை மேற்கொண்டு புதியதாக, கூடுதலாக ஒரு துணை மின் நிலையம் அமைக்க முடியுமா என்பது குறித்து அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 167, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**167—**

**பயணியர் மாளிகை**

***2706—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, ராயக்கோட்டையிலுள்ள நெடுஞ்சாலைத் துறை பயணியர் மாளிகையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) வேப்பனஹள்ளி தொகுதி, ராயக்கோட்டையில் பழுதடைந்த நெடுஞ்சாலைத் துறையின் பயணியர் மாளிகைக்குப் பதிலாக, புதிய பயணியர் மாளிகை ரூ.30 இலட்சம் செலவில் கட்டப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.